பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 10 திங்கட்கிழமை 22.02.2021 கதிர் 340

## சிறைச்சாலைக் கொத்தணி 4 ஆயிரத்து 775 ஆக உயர்வு

சிறைச்சாலைகளிலிருந்து மேலும் 28 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளிலிருந்து அடையாளம் காணப்பட்ட மொத்தக் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 775 ஆக உயர்வடைந்துள்ளது.

2

# ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவு வழங்குமாம் இந்தியா

## இப்படி நம்புகின்றார் தினேஷ்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையெழுத்துடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் இலங்கைத் தூதரகம் ஊடாக இந்தியப் பிரதமருக்கு கிடைத்திருக்கின்றது. அந்தவகையில் இந்தியா இந்த கூட்டத்தொடரின் போது இலங்கைக்கு ஆதரவு வழங்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

2

நீதிக்கான பேரணியில் கலந்துகொண்டமை தொடர்பில்

## சுமந்திரன் எம்.பியிடமும் பொலிஸார் வாக்குமூலம்



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையில் முன்னெடுக்கப்பட்ட நீதிக்கான பேரணியில் பங்கேற்றமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரனிடம்பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

2

## சுமந்திரனின் பாதுகாப்பை நீக்கியமை ஏன்? பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை கோரல்

எழுத்துமூலம் விடுத்தார் சபாநாயகர்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்திலும், கட்சித்தலைவர் கூட்டத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பியுள்ள நிலையில் இது தொடர்பான அறிக்கை ஒன்றைத் தனக்குத் தருமாறு சபாநாயகர் பொலிஸ்மா

2

## இம்ரானுடனான சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்து

ஹக்கீம், ரிஷாத் விசனம்



இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் மாத்திரமே சந்திப்புக்களைநடத்தவுள்ளார். ஹக்கீம் எம்.பி., ரிஷாத் எம்.பி. ஆகியோருடனான சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோரை அண்மையில் சந்தித்து, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர்

2



## ‘மொட்டு’ கூட்டணிக்கு புத்துயிர் கொடுக்கவும்

ஜனாதிபதி, பிரதமரிடம் பங்காளிகள் கோரிக்கை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்கு புத்துயிர்கொடுத்து அதனைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுப்பதற்கு ஆளுங்கூட்டணியிலுள்ள பங்காளிக்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அடுத்த தேர்தலுக்கு முன்னர் கூட்டணி கட்டியெழுப்பப்பட்டு, ஓரணியில் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்ற யோசனையும்முன்வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணியில் அங்கம் வகிக்கும் 10 இற்குமேற்பட்ட பங்காளிக் கட்சிகள், அண்மைக் காலமாக

2

## வடக்கில் உள்ள தீவுகளை எந்நாட்டுக்கும் வழங்கோம்

அமைச்சர் டலஸ் கூறுகின்றார்



வடக்கில் உள்ள தீவுகளை எந்த நாட்டிற்கும் வழங்கப்போவதில்லை என மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலை தீவு ஆகிய தீவுகளுக்கு தற்போது டீசல் மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

இந்நிலையில் அங்கு காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டத்தை

2

A/L 2021, 2022

புவியியல் A+

DCM - யாழ்நகர்

முழுநிலாக் கருத்தரங்கு : 01

“தேசப்படங்கள்”

காலம் :- 26.02.2021

நேரம் :- 10 - 02 pm

ஆசிரியர்:- P.S.V. தினேஸ் B.A (Hons) Geo.sp Dip in GIS RS, M.phil in Geography

* Multimedia ஊடான கருத்தரங்கு
* வெளிமாணவர்கள் அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
* கையேடுகளிற்கான கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேரவையுடன் இணையாது!

கட்சியின் பொதுச்செயலர் கஜேந்திரன் எம்.பி. திட்டவட்டம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புதிதாக உருவாகும் தமிழ்த் தேசிய பேரவையுடன் ஒருபோதும் இணையாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி.

தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிப் பேசின. ஆரம்பத்தில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றைய கூட்டத்திலும் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், இந்தப் பேரவையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைந்து பயணிக்குமா? என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரனிடம்

2

## இம்ரானுடனான சந்திப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடியிருந்தார். இதன்போது பாகிஸ்தான் பிரதமரைச் சந்திப்பதற்கு நேரம் கோரியிருந்தனர். இதன்படி குறுகிய நேரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த சந்திப்பு நடைபெறாது என பாகிஸ்தான் தூதுவரால், மேற்படி இரு தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சந்திப்பு இரத்தானமைக்கான காரணம் வெளியாகாத போதிலும், அரச உயர்மட்டத்திலிருந்து விடுக்கப்பட்ட அழுத்தத்தால் அவ்வாறு நடந்திருக்கக் கூடும் என நம்பப்படுகின்றது.

## ‘மொட்டு’ கூட்டணிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர் சந்திப்புக்களை நடத்திவருகின்றன. முதல் இரு சந்திப்புகளும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீர வன்ஸவின் வதிவிடத்தில் நடைபெற்றது. மூன்றாவது சந்திப்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போதே ‘ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டமைப்பை’ கட்டியெழுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை ஆளுங்கட்சியின் பிரதானிகளிடம் முன்வைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் ‘ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டமைப்பு’ எனும் பெயரில் கூட்டணி உருவாக்கப்பட்டது. எனினும், தேர்தலின் பின்னர் கூட்டணியின் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன.

இந்நிலையில் மொட்டு கட்சியை (ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவை) மட்டும் பலப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையிலேயே, தனிவழி செல்லாது, கூட்டணியை பலப்படுத்த வேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதற்கு பங்காளிகள் தீர்மானித்துள்ளன.

இதன்படி ஜனாதிபதி, பிரதமர் உட்பட மொட்டு கட்சியின் பிரமுகர்களை விரைவில் சந்தித்து இக்கோரிக்கையை முன்வைப்பார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஆளுங் கூட்டணிக்குள் அண்மைக் காலமாக கருத்து மோதல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசிய மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் வெற்றிகரமாக மக்கள் எழுச்சிப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. இதற்குத் தமிழரசுக் கட்சியும் ஆதரவளித்தது. ஆனால், இந்தப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் விதமாக பச்சைத் துரோகத்தனமாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். இன்று தமிழ் மக்களுக்குப் பலவீனமான ஐ.நாவின் அறிக்கை ஒன்று வந்துள்ளது என்றால் அதை முழுமையாக தமிழரசுக் கட்சி தான் ஏற்க வேண்டும்.

சுமந்திரனின் இந்தத் துரோகத்தனத்தை நியாயப்படுத்தும் விதமாகவே எம்.கே.சிவாஜிலிங்கமும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தரப்புக்கள் கூடித்தான் இந்தப் பேரவையை அமைக்கின்றன. இது முழுக்க முழுக்க கண்துடைப்பு நாடகம். மக்களை ஏமாற்றி தாங்கள் செய்யும் துரோகத்தை மறைக்கும் விதமாகவே நாங்கள் இதனைப் பார்க்கிறோம். தமிழரசுக் கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் அந்தக் கூட்டில் இருந்து கொண்டு கோட்டாபயவைப் பாதுகாப்பதற்காக நாடகமாடுகின்றார் என்பதே எமது கருத்து - என்றார்.

## சுமந்திரனின் பாது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிபருக்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்ற நிலையில் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் சுமந்திரன் எம்.பிக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படையினரை நீக்கியமை ஏன் என்ற கேள்வி எதிர்க்கட்சி உறுப்பினர்களால் எழுப்பப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் நாடாளுமன்றத்திலும் தொடர்ச்சியாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது தொடர்பில் கேள்வி எழுப்பிய வேளையில், சுமந்திரன் எம்.பி., விடுதலைப்புலிகளின் நினைவேந்தல் கலந்துகொள்கின்றார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்துகொண்டார்.

இவ்வாறான செயற்பாடுகள் தேசிய பாதுகாப்பு விடயங்களை கேள்விக்கு உட்படுத்தும் விடயமாகின்ற காரணத்தாலும், இலங்கையின் பாதுகாப்புப் படைகளை குற்றம் சுமத்திக்கொண்டு அவர்களின் பாதுகாப்பைக் கேட்பது என்ன நியாயம் என்ற கேள்வி எம்மத்தியில் உள்ளமையால் நானே சுமந்திரன் எம்.பிக்கான பாதுகாப்பை நீக்க நடவடிக்கை எடுத்தேன் என விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பதில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், எதிர்க்கட்சியினரின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் விசேட பாதுகாப்பை நீக்கியமை தொடர்பாக பொலிஸ்மா அதிபர் அறிக்கை ஒன்றைத் தருமாறு கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது குறித்து பொலிஸ்மா அதிபரின் பதில் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சுமந்திரன் எம்.பியிடமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று முற்பகல் கொழும்பிலுள்ள தனது இல்லத்துக்கு வந்த பொலிஸார் தன்னிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர் என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்துகொண்டமை தொடர்பாகவே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாதம் 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரையில் அந்தப் பேரணி நடத்தப்பட்டிருந்தது. இந்தப் பேரணியின்போது வடக்கு, கிழக்கில் பல இடங்களில் பொலிஸார் நீதிமன்றங்களின் ஊடாக தடை உத்தரவைப் பெற்றிருந்தனர்.

எனினும், திட்டமிட்டவாறு பேரணி பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் நடத்தப்பட்டது.

இந்நிலையில், அந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வாக்குமூலங்களைப் பதிவு செய்து வருகின்றனர். இதன்படி இன்று எம்.ஏ.சுமந்திரன் எம்.பியிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், செல்வம் அடைக்கலநாதன், சிவஞானம் சிறிதரன், இரா. சாணக்கியன், தவராசா கலையரசன், எஸ்.வினோநோகராதலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் ஆகியோரிடமும் ஏற்கனவே பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

## சிறைச்சாலைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும், தற்சயம் அதிகாரிகள் மற்றும் கைதிகள் உள்ளடங்கலாக 127 பேர் மாத்திரமே கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றமையுடன், ஏனையவர்கள் பூரண குணமடைந்துள்ளனர்.

## ஜெனிவாவில் இலங் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் பல்வேறு உறுப்புநாடுகளுக்கும் இவ்வாறு இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு கோரிய கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் இறைமை உள்ளநாடு என்ற வகையில் இலங்கைக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் ஆதரவு வழங்கும் என்று நம்புகின்றோம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகியுள்ளது. இதன்போது இலங்கை தொடர்பாக மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு புதிய பிரேரணை இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்படும் பட்சத்தில் அதனை இலங்கை எதிர்க்கும்போது அங்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். வாக்கெடுப்பு நடத்தப்படும்போது இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பல்வேறு உறுப்பு நாடுகளிடம் இலங்கை கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் இதில் நான் நாளை இரவு 8 மணிக்கு இலங்கையில் இருந்தவாறு இணைய வழியில் உரையாற்றவுள்ளேன்.

இதன்போது இலங்கையின் நிலைப்பாடு தெளிவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு அறிவிக்கப்படும்.

நாங்கள் என்ன செய்திருக்கின்றோம், என்ன செய்யப்போகின்றோம், எமது நிலைப்பாடு என்ன என்ற விடயங்களை மிகத் தெளிவாக - விரிவாக அறிவிப்போம்.

அதேபோன்று ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கைக்கு நாம் எமது எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றோம்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஆதரவு வழங்குமாறு கோரி உறுப்பு நாடுகளுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கின்றோம்.

உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கும் பிரதமர்களுக்கும் நாங்கள் இவ்வாறு ஒத்துழைப்புக் கோரிய கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையெழுத்துடன் கடிதங்கள் உறுப்பு நாடுகளுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தவகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இவ்வாறு ஒத்துழைப்பு கோரிய கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அனுப்பப்பட்டிருக்கின்றது.

அந்தக் கடிதம் தற்போது எமது தூதரகம் ஊடாக இந்தியப் பிரதமரின் கைகளுக்குச் சென்றிருக்கின்றது. அதனை அவர்கள் பரிசீலித்து எமக்கு இந்தக் கூட்டத்தொடரின்போது ஆதரவு வழங்குவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்குப் பல நாடுகளாலும் ஆதரவு வழங்கப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இந்தியா என்பது ஒரு மிகப் பெரிய நாடு. இந்தியா இலங்கைக்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதன்படி இந்தியா எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் இருக்கின்றோம். இலங்கை இறைமையுள்ள நாடு. ஓர் இறைமையுள்ள நாட்டுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டுவர முடியாது. அந்தவகையில் அவ்வாறான ஒரு முயற்சி இடம்பெறும் போது எமக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் ஒத்துழைப்பு வழங்கும் என்றே நம்புகின்றோம்.

குறிப்பாக சீனாவும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றோம் - என்றார்.

## வடக்கில் உள்ள தீவுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 12 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியுடன் சீனாவின் பங்களிப்புடன் குறித்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருந்தது.

இதேவேளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, வடக்கில் இந்த திட்டத்திற்காக 12 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை நன்கொடையாக இலங்கைக்கு வழங்குவதாகவும் அரசாங்கத்திடம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு முடிவு எட்டப்படும் என்றும் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஐக்கியம் என்ன திடீர் சாம்பாரா?

நோக்கம் நல்லதாக இருக்கலாம். இலக்குச் சரியானதாக இருக்கலாம். ஆனால் அதற்காக விடயத்தை 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் அவசர அவசரமாக முன்னெடுக்கக் கூடாது. சரியான திட்டமிடல் ஆயத்தங்கள், வியூகம் வகுத்தல் இல்லாமல் முயன்று மூக்குடைபடக் கூடாது.

அதுவும் அரசியலில் – அதுவும் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்கும் வேலையை – இப்படித் திடுதிப்பென முன்னெடுப்பது முட்டாள்தனமின்றி வேறில்லை.

இத்தகைய நெருக்கடி சமயத்தில் தரப்புகளை ஐக்கியப்படுத்தி முன்கொண்டு செல்லப் போகின்றோம் என்றால் அதற்கு முன்னரே அதிக "Home Work" செய்ய வேண்டும்.

திடீரென ஒரு கூட்டம் போடுவது, அந்தக் கூட்டத்தின் முடிவில் அதைத் தீர்மானித்தோம், இதை முடிவு செய்தோம், அப்படிச் செய்யப் போகின்றோம், இப்படிச் செயற்படப் போகின்றோம் என்று ஊடகங்களைக் கூட்டிப் பரபரப்பு அறிவிப்புகளை விடுப்பதில் அர்த்தமில்லை.

அப்படியில்லை, நாங்கள் எங்கள் மனதுக்குப் பட்டபடி செயற்படுகின்றோம், இந்த ஐக்கியப்படும் முயற்சியில் விரும்பியவர்கள் வரலாம், விரும்பாதவர்கள் தள்ளி நிற்கலாம் என்று தூக்கி எறிந்து – விட்டேத்தியாக – நடப்பதிலும் பயனில்லை.

நகைச்சுவை நடிகர் வடிவேல் பாணியில் சொல்வதானால் 'எந்த விடயத்தையும் பிளான் பண்ணிப் பண்ணனும்.' என்பது முக்கியம்.

ஆனால் நம் அரசியல்வாதிகள் அப்படிச் செயற்படுபவர்களாகத் தோன்றவில்லை. மதியூகத்துடன் காய்களை நகர்த்துபவர்களாகவும் இல்லை. அன்றன்றைய நிலைமைக்கு ஏற்ப அதிரடி புஸ்வான அறிவிப்புக்களை அவிழ்த்து விடுபவர்களாகவே தோன்றுகின்றது.

இப்போது பத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டு முயற்சி என்ற பெயரில் நடக்கும் கைங்கரியத்தைப் பார்த்தால் – திடீர், திடீரெனக் கூட்டம், திடீர், திடீரென அறிவிப்பு, அதிரடி முடிவுகளை நோக்கும் போது – இப்படித்தான் சலித்துக் கொள்ளத் தோன்றுகின்றது.

'தமிழ்த் தேசியப் பேரவை' என்ற அறிவிப்புக் கூட, ஒரு திடீர் ரசம், திடீர் தோசை போன்ற திடீர் அறிவிப்பாக வந்திருப்பது அத்தகைய எண்ணத்தைத்தான் தந்து நிற்கின்றது.

பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மைச் சிந்தனை வடிவமே தென்னிலங்கை ஆட்சிப் பீடமாக விஸ்வரூபம் எடுத்திருக்கையில் மற்றப் பக்கத்தில் தமிழர் தரப்புகள் ஐக்கியப்பட்டு நிற்கின்றமை – ஒன்றுபட்டுச் செயற்படுகின்றமை – வரலாற்றுக் கட்டாயம். வேறு மார்க்கம் நம் முன் இல்லை என்பதுதான் உண்மை.

ஆனால், ஒற்றுமைப்படுத்தல் முயற்சி நாகஸ்திரம் போன்றது. ஒரு தடவை பயன்படுத்தினால் திரும்பவும் முயலக் காலம் எடுக்கும். அதனைத் திடுதிப்பென அரங்கேற்றி முடிக்க முடியாது. அதற்கு முதல், யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். களநிலைமையை உணர்ந்து மதியூகத்துடன் காய் நகர்த்த வேண்டும். அதற்கு "Home Work" அதிகம் செய்ய வேண்டியிருக்கும்.

அது எதுவும் இல்லாமல் 'பலஸ்தீன தேசியக் கவுன்ஸில்' போன்ற ஒன்றை இங்கு உருவாக்குவது என்ற பெயரில் ஒரு தலைப்பட்ச நடவடிக்கை எடுப்பது என்பது குறைப் பிரசவத்தில் இறந்து போகும் சிசுவாகிவிடும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து – பிளந்து – நிற்கின்றன. பிரதான கட்சிக்குள்ளேயே பிளவு நிலைமை வெளிப்படையானது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசாவும், சிரேஷ்ட துணைத் தலைவராக சி.வீ.கே. சிவஞானமும் இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் தமது முயற்சியில் முழுத் தமிழரசுக் கட்சியையும் அதில் ஏற்றிச் செல்கின்றோம் என்ற பிரக்ஞை முயற்சியாளர்களுக்கு இருக்க வேண்டாமா? இப்படி ஒரு முயற்சியை ஆரம்பிக்கின்றோம் என்ற தகவலாவது – குறைந்தபட்சம் ஒரு செய்தியாவது – தமிழரசின் மூத்த தலைவர்களுக்கு – விசேடமாக சம்பந்தன், சுமந்திரன், சிரேஷ்ட துணைத் தலைவர் செல்வராஜா, பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம், சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், கலையரசன் போன்றோருக்கு – தெரிவிக்காமல் இத்தகைய திடீர் அறிவிப்பை விடுத்தால் அதன் விளைவு என்ன? அதன் நோக்கம் என்ன? ஐக்கியத்தை ஏற்படுத்தும் வேலையா? அல்லது தமிழரசுக்குள் மேலும் பிளவை ஏற்படுத்தும் திட்டமிட்ட சதியா?

திடீரென்று ஒரு பெயரை அறிவித்து, அந்தப் பெயரில் ஒன்றுபட்டு இயங்கத் தயாரா என்று உங்கள் கட்சியில் பேசி விட்டு வாருங்கள், மூன்று நாள்களில் கூடி முடிவு செய்வோம் என்பதற்கு இது என்ன திடீர் சாம்பார் தயாரிப்பா?

தனக்கும், இப்படி ஒரு முயற்சி முன்னெடுக்கப்படுவது தெரியாது என்று இந்த அறிவிப்பின் போது அந்தக் கூட்டத்தில் இல்லாத தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவே ரெலோவின் தலைவர் செல்வத்திடம் சமாதானம் கூறியிருக்குன்றார்.

இவை பற்றி அதிகம் குறிப்பிடலாம். நேரம் வரும்போது இப்பத்தியில் பின்னர் கவனிக்கலாம்.

# தமிழின அழிப்புக்கு ஐ.நாவும் உடந்தை!

## செல்லமாக அணுகும் பிரேரணைகள் வேண்டாம்
## அனந்தி சசிதரன் காட்டத்துடன் தெரிவிப்பு



யுத்தம் நடந்துகொண்டிருந்த வேளையில் ஈழத்தமிழர்கள் விடயத்தில் தலையிடவேண்டிய ஐக்கிய நாடுகள் சபை, தன்னுடைய பொறுப்பில் இருந்து நழுவியிருந்த நிலையில் தமிழர்கள் மீதான இனவழிப்புக்கு ஐ.நாவும் காரணம் என ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தமிழர்கள் விடயத்தில் ஐ.நாவில் கொண்டுவரப்படும் பிரேரணைகள் தமிழர்களுக்கு நீதி தரவேண்டுமே தவிர, இலங்கையை செல்லமாக அணுகும் நிலைப்பாடு இருக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருக்கின்ற நிலையில், தமிழர் பிரதிநிதிகளாக இருக்கின்ற நீங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறதா? அவ்வாறு கலந்துகொள்ளாதுவிடின், இந்தப் பிரச்சினையை சர்வதேசம் எவ்வாறு அணுக வேண்டும் என நினைக்கின்றீர்கள் என ஊடகவியலாளரால் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர் –

இம்முறை கொரோனா தொற்று நிலைமை காரணமாக, விமானப் போக்குவரத்தில் இடையூறுகள் இருக்கின்றமையுடன் விமானப் பயணத்துக்கான செலவுகளும் அதிகரித்திருக்கின்றன.

ஐக்கிய நாடுகளினுடைய வேலைத் திட்டத்தைக் கடந்த காலங்களில், மாகாண சபை உறுப்பினராகவோ, மாகாண அமைச்சராகவோ இருந்த காலப்பகுதியில், ஏதோவொரு வழியில் விமானச் சீட்டுக்களை எடுப்பதற்கான வேலையைச் செய்திருந்தோம். இப்போழுது இதற்காக பொது நிதியொன்றை ஏற்பாடு செய்வதன் ஊடாகத்தான் நாங்கள் அங்கு செல்லக்கூடியதாக இருக்கும்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு விசா எடுப்பதிலும் பிரச்சினை இல்லை, விமானச் சீட்டு எடுப்பதிலும் பிரச்சினை இல்லையென்று நான் நினைக்கின்றேன். எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் என்னைப்போன்றவர்கள் இந்தப்பயணத்தைச் செய்வதென்பதை நெருக்கடியான நிலையாகப் பார்க்கின்றோம்.

அதேநேரம், இப்பொழுது ஐக்கிய நாடுகளுடைய தீர்மானம் வந்துள்ள நிலையில், ஏற்கனவே கடந்த காலங்களில் வந்த தீர்மானத்தைவிட இதுவொரு மோசமான தீர்மானமாகப் பார்க்கின்றோம்.

ஏனென்றால், யுத்தம் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நாங்கள் போரின் சாட்சியாகப் போய் எத்தனைமுறை பேசியும்கூட, எங்களுடைய குரல்களை இது வரையும் செவிமடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு மென்போக்காக இந்தப் பிரச்சினையைக் கையாண்டிருப்பதாக நாங்கள் பார்க்கின்றோம்.

இந்த இடத்தில், ஐக்கிய நாடுகள் சபையையும் குற்றஞ் சாட்டுகின்றோம். காலம் தாழ்த்தப்பட்ட நீதியென்பது ஈழத்தமிழர்களுக்கு ஒரு மறுக்கப்பட்ட நீதியாகும். ஏனென்றால், யுத்தம் நடந்துகொண்டிருந்த வேளையில், இலங்கை விடயத்தில் அல்லது ஈழத் தமிழர்களுடைய விடயத்தில் தலையிடவேண்டிய ஐக்கிய நாடுகள் சபை, தன்னுடைய பொறுப்பில் இருந்து நழுவியதுடன் தமிழர்கள் இனவழிப்புக்கு ஆளாவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் காரணமாக இருந்திருக்கின்றது.

எனவே, இப்பொழுது வந்திருக்கின்ற தீர்மானத்தைப் பார்த்தால் அதில் ஒன்றுமே இல்லை. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வரையறைக்குள்ளும் வரவில்லை. தமிழ் மக்களுக்கு இனவழிப்பு நடந்ததும் வரவில்லை.

இன்றைக்கு பூகோள நலன் சார்ந்து, இலங்கை அரசை சீனா தனது ஆதிக்கத்துக்குள் கொண்டுவருவதைத் தடுப்பதற்காக, தமிழர்களைப் பயன்படுத்தி, தாங்கள் அவர்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுப்பதுபோன்று செய்திகள் காட்டப்படுகின்றன. இதுதவிர ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை. மிகவும் மென்போக்காக, ஒரு செல்லமாக அணுகியிருப்பதை நாங்கள் எங்கள் மொழியில் சொல்லக் கூடியதாக இருக்கிறது.

இதேவேளை, சூம் நிகழ்ச்சியின் ஊடாக நாங்கள் பக்க அறைக் கூட்டங்களோ அல்லது நேரடியாகவோ ஜெனிவா தரப்பினருடன் பேச முடிந்தால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோம்.

நிச்சயமாக இம்முறையும் ஜெனிவாவுக்குப் போறதுக்குப் பார்க்கின்றோம். என்றாலும் கொரோனாபிரச்சினைதடையாக இருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசா நடைமுறையும் சரி, பயணச் சீட்டு நடைமுறைகளும் சரி தடையில்லாமல் இருக்கும். அதேபோல இந்தக் கொவிட் – 19 இற்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கான சூழலும் அவர்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளது, இந்நிலையில், அவர்கள் ஜெனிவா சென்று வருவது பெரிய சவாலாக இருக்காது என்று நினைக்கின்றேன்.– என்று குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின் செயற்பாட்டுக்கு வெளி மாவட்ட பஸ் சேவை சங்கம் போர்க்கொடி!

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியூடாக வரும் இ.போ.சபை பஸ்களை கட்டுப்படுத்த முடியாத மாநகர முதல்வர் தனியார் பஸ்களையும் தடுத்து நிறுத்துமாறு பொலிஸாருக்கு எழுத்தில் வழங்கியமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வெளிமாவட்ட சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் சி.சிவபரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் சி.சிவபரன் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் வெளிமாவட்ட சேவைக்கான பஸ் நிலையம் அமைய வேண்டும் என்பதில் நாமும் மிக ஆவலாக இருந்தோம். அதற்கான சகல ஒத்துழைப்பையும் வழங்கினோம். அதற்கமைய புதிய பஸ் நிலையம் திறக்கப்பட்ட பின்பு 3 தினங்கள் தனியார் பஸ்கள் மட்டும் அந்த பஸ் நிலையத்தின் ஊடாகவே சேவையில் ஈடுபட்டோம். அப்போதும் இ.போ.சபை தொடர்ந்தும் வைத்தியசாலை அருகே இருக்கும் பஸ் நிலையத்தில் இருந்தே சேவையை நடத்தியது.

இதனையடுத்து நாமாக நேரில் சென்று முதல்வரிடம் இரு மணி நேரம் காத்திருந்து பேச்சுக்களில் ஈடுபட்டதற்கமைய முதல்வர் சென்று ஆளுநருடன் உரையாடி மீண்டும் வந்து பதிலளிக்கும் வரையில் காத்திருந்தோம். இதன்போதும் சரி தற்போதும் சரி நாம் தெளிவாகவே கூறுகின்றோம் இணைந்த வகையிலான ஒரே இடத்தில் இருந்து அதாவது புதிய பஸ் நிலையத்தில் இருந்தே இ.போ. சபையினரும் சேவையை ஆரம்பிக்க சம்மதித்தால் உடனடியாகவே நாம் செல்லத் தயாராகவே உள்ளோம்.

எனவே, மாநகர சபையினதோ அரசினதோ கொள்கைக்கு எதிராக தனியார் பஸ் சங்கம் இயங்கவும் இல்லை. முரண்பாடாக செயற்படவும் இல்லை என்ற நிலையில் எமது பஸ்களையும் தடுத்து நிறுத்துமாறு எதேச்சையாக மாநகர முதல்வர் பொலிஸாருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் அறிவித்துள்ளமையை வன்மையாக கண்டிப்பதோடு எதிர்வரும் காலத்தில் எந்த முடிவினையும் இணைந்து மேற்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். – என்றார்.

# ஆட்சிக்கவிழ்ப்பு செய்த எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் தகுந்த தண்டனை கொடுப்பார்கள்

## நாராயணசாமி பரபரப்பு பேட்டி



புதுச்சேரியில்நாராயணசாமிதலைமையிலான காங்கிரஸ் அரசு பெரும்பான்மையை இழந்தது. சட்டசபையில் நாராயண சாமி கொண்டு வந்த நம்பிக்கை தீர்மானம் தோல்வியடைந்தமையையடுத்து ஆட்சி கவிழ்ந்தது. அரசு பெரும்பான்மையை இழந்ததாக சபாநாயகர் சிவக்கொழுந்து முறைப்படி அறிவித்தார்.

நியமன எம்.எல்.ஏக்கள் மூலம் ஆட்சியை கவிழ்த்தமையால் காங்கிரஸ் உறுப்பினர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக அவையைவிட்டு வெளியேறிய நாராயணசாமி முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனை சந்தித்து இராஜினாமா கடிதம் கொடுத்தார். தனது அமைச்சரவையும்இராஜினாமாசெய்வதாக கூறினார். இனி ஆளுநரின் முடிவைப் பொறுத்துஅடுத்தகட்டநகர்வுகள்இருக்கும்.

இராஜினாமா செய்த நாராயணசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அங்கே அவர் கூறியதாவது:-

புதுச்சேரி அமைச்சரவையை ராஜினாமா செய்துள்ளோம். இனி முடிவு செய்யவேண்டியது ஆளுநர்தான். நியமன எம்.எல்.ஏக்கள் மூலம் ஆட்சிக்கவிழ்ப்பு செய்த எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் தண்டனை கொடுப்பார்கள். என்ஆர் காங்கிரஸ், அ.தி.மு.க, பா.ஜ.கவுக்கு மக்கள் தக்க தண்டனை கொடுப்பார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு தான் வாக்களிக்க உரிமை உண்டு.நியமனஎம்.எல்.ஏக்கள்வாக்களிக்க உரிமையில்லை.இவ்வாறுஅவர்கூறினார்.

## அசாமில் இயற்கை எரிவாயு திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார் பிரதமர்




பிரதமர் மோடி இன்று அசாம் மாநிலத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு சென்ற அவர் தேமாஜியில் சிலாபத்தர் என்னுமிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் இயற்கை எரிவாயு திட்டங்களை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்தியன் ஒயில் பொங்கைகான் சுத்திகரிப்பு ஆலையில் இந்த்மாக்ஸ் யூனிட், மதுபானில் உள்ள ஒயில் இந்தியா நிறுவனத்தின் செகண்டரி டேங்க் ஃபார்ம் மற்றும் டின்சுக்கியாவின் ஹெபடா கிராமத்திலுள்ள கேஸ் கம்ப்ரசர் நிலையம் ஆகியவற்றை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். மேலும் தேமாஜி பொறியியல் கல்லூரியை திறந்து வைத்தார். சுவால்குச்சியில் அமைய உள்ள புதிய பொறியியல் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, மாநில உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு மற்றும் அசாம் அரசு ஒத்துழைப்புடன் இணைந்து செயற்படுவதாக கூறினார். மேலும், மாநிலத்திற்கு பெரும் ஆற்றல் வளங்கள் இருந்தபோதிலும், முந்தைய அரசாங்கங்கள் பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்தவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

## விவசாயிகளின் வலியை அரசு புரிந்துகொள்ளவில்லை



ராகுல் காந்தி தெரிவிப்பு

கேரள மாநிலம் வயநாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ராகுல் காந்தி, முட்டில் பகுதியில் நடந்த விவசாயிகளின் டிராக்டர் பேரணியில் பங்கேற்றார். பேரணியின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் சிரமத்தை உலகமே பார்க்கிறது. ஆனால் மத்திய அரசால் விவசாயிகளின் வலியை புரிந்துகொள்ள முடியவில்லை. விவசாயிகளின் நிலைமை குறித்து கருத்து தெரிவிக்கும் பொப் நட்சத்திரங்கள் நம்மிடம் உள்ளனர், ஆனால் இந்திய அரசு அக்கறை காட்டவில்லை.

தொடர்ந்து போராட்டங்கள் நடத்தி கட்டாயப்படுத்தப்படாவிட்டால் இந்த 3 புதிய சட்டங்களை அவர்கள் திரும்பப் பெறப்போவதில்லை. இந்த 3 சட்டங்கள் இந்தியாவில் விவசாய முறையை அழிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

பாரத மாதாவுக்கு சொந்தமான ஒரே தொழில் விவசாயம். மற்ற ஒவ்வொரு வணிகமும் மற்றவர்களுக்கு சொந்தமானது. ஒரு சிலர் விவசாயத்தை சொந்தமாக்க விரும்புகிறார்கள். 2 - 3 பேர் இந்திய விவசாயத்தை சொந்தமாக வைத்திருக்கவும் கட்டுப்படுத்தவும் இந்த 3 சட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தில் உள்ள இரண்டு பேர் அரசாங்கத்திற்கு வெளியே இரண்டு நபர்களுடன் கூட்டுசேர்ந்துள்ளனர்.-என்று அவர் பேசினார்.




## மரண அறிவித்தல்



**கனுக்கேணி மேற்கை பிறப்பிடமாகவும் 02ஆம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட**

அமரர். **கணபதிப்பிள்ளை மார்க்கண்டு**

கனுக்கேணி மேற்கை பிறப்பிடமாகவும் 02ஆம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரியும், கலைமகள் வித்தியாலய முன்னைநாள் அதிபரும், சமாதான நீதிவானும் கரைதுறைப்பற்று மத்தியஸ்த சபை உறுப்பினருமான கணபதிப்பிள்ளை மார்க்கண்டு அவர்கள் 20.02.2021 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22.02.2021 இன்று திங்கட்கிழமை நடைபெற்று காலை 11மணிக்கு பூதவுடல் நாவற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

**தகவல்:-குடும்பத்தினர்**
**077 484 8964**

# அமெரிக்காவில் போயிங் 777 வகை விமானங்களின் சேவை நிறுத்தம்





அமெரிக்காவில் போயிங் 777 விமானம் நடுவானில் தீப்பிடித்து எரிந்ததையடுத்து, யுனைட்டட் விமானநிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் 24 போயிங் 777 விமானங்களின் சேவையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

அமெரிக்காவின் டென்வர் நகரில் இருந்து ஹொனலுலு நகருக்கு 231 பயணிகளுடன் சென்ற யுனைடெட் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமானம் நடுவானில் தீப்பிடித்து எரிந்தது.

இதனையடுத்து விமானம் உடனடியாக டென்வர் விமான நிலையத்தில் திருப்பப்பட்டு அவசரமாக தரையிறக்கப்பட்டது. இந்த விபத்தை தொடர்ந்து பிராட் மற்றும் விட்னி பி.டபுள்யூ 4000 சீரீஸ் என்ஜீன்களுடன் கூடிய போயிங் 777 விமானங்களை ஆய்வு செய்து பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அந்நிறுவனத்துக்கு பெடரல் ஏவியேன் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

# மெக்சிக்கோவில் விமானப் படையின் ஜெட் விபத்து; 6 ராணுவ வீரர்கள் பலி

மெக்சிகோவில் நடந்த விமான விபத்தில் 6 இராணுவ வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்து உள்ளனர்.

லியர் ஜெட் 45 ரக சிறிய விமானம் ஒன்று 6 இராணுவ வீரர்களுடன் எல் லென்செரோ விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட நிலையில் கிழக்கு மெக்சிக்கோ பகுதியில் உள்ள ஹீரோயிகா வெராக்ரூஸ் மாகாணத்தின் எமிலினோ பாடா பகுதியில் விழுந்து நொறுங்கியது.

விபத்துக்கான காரணம் குறித்து மெக்சிக்கோ விமானப் படை அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.



# வன்முறையைத் தூண்டுவதாக தெரிவித்து மியன்மார் ராணுவத்தின் பேஸ்புக் பக்கம் நீக்கம்



கடந்த 20 நாள்களாக மியன்மாரில் ஜனநாயக ஆதரவாளர்கள் யாங்கூன் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் போராட்டப் பேரணிகளை நடத்தி வருகின்றனர். இதனையடுத்து அங்கு தற்காலிகமாக இணைய சேவை முடக்கப்பட்டது. காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டது.

இராணுவத்தினரின் இந்த அடக்குமுறை நடவடிக்கைக்கு உலகம் முழுவதும் இணையத்தில் கடும் கண்டனம் குவிந்தது. முகப்புத்தக தளம் மியன்மார் நாட்டில் தற்காலிகமாக முடக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது மீண்டும் இயங்கி வருகிறது.

போராட்டக்காரர்கள் பலர் போராட்டங்கள் குறித்த புகைப்படங்கள் தகவல்களை முகப்புத்தக பக்கங்களில் பகிர்ந்து வருகின்றனர். போராட்டத்தின் உச்சகட்டமாக கலவரத்தில் ஈடுபட்ட இரு போராட்டக்காரர்கள் இராணுவத்தினரால் முன்னதாக சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனையடுத்து இந்தப் போராட்டம் மேலும் தீவிரம் அடைந்துள்ளது.

இந்நிலையில், மியன்மார் இராணுவத்தின் அதிகாரப்பூர்வ முகப்புத்தக பக்கமான டாட்மேடவ், முகப்புத்தக வரம்புகளை மீறியதற்காக முடக்கப்பட்டுள்ளது. பலமுறை முகப்புத்தகத்தின் வரம்புகளை இந்த இராணுவ பக்கம் மீறி வந்தமையால் தற்போது முடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஸ்பெயின் அரசுக்கு எதிராக, முன்னாள் தலைவர்களை சுவர் ஓவியமாக வரைந்து நூதன முறையில் போராட்டம்



ஸ்பெயின் அரசுக்கு எதிராக ஓவியர் ஒருவர் சுவர் ஓவியம் மூலம் நூதன போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளார்.

ஸ்பெயின் அரசுக்கு எதிராக கருத்து வெளியிட்டதை அடுத்து பாப் பாடகர் பாப்லோ ஹசலை பொலிஸார் கைது செய்தனர். இதை கண்டித்து அந் நாட்டு மக்கள் தொடர் போராட்டத்திலும், கலவரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அமைதியான வழியில் போராட்டத்தை நடத்தும் விதமாக ஓவியர் ஒருவர் முன்னாள் ஸ்பெயின் அரசர் ஜுவான் கார்லஸ் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி பிரான்சிஸ்கோ பிரான்கோ ஆகியோரின் சுவர் ஓவியத்தை வரைந்து நூதன போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளார்.

ஓவியரின் புது முயற்சி அந்நாட்டு மக்களிடையே வரவேற்பை பெற்று உள்ளது.

# மருத்துவர்களை கௌரவிக்கும் வகையில் எகிப்தில் புதிய நாணயங்கள் வெளியீடு




எகிப்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த போராடி வரும் மருத்துவ குழுவினரை கௌரவிக்கும் விதமாக ஒன்றரை கோடி புதிய நாணயங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

எகிப்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு 400 இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களின் தியாகத்துக்கு மரியாதை செலுத்தும் விதமாகப் புதிதாக அச்சிடப்பட்டுள்ள நாணயங்களில் எகிப்தின் மருத்துவக் குழுக்கள் என பொறிக்கப்பட்டுள்ளது.

மேலும் அங்கு பணியாற்றும் 6 லட்ச மருத்துவ ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

# பன்றி வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப மேம்பாடு; சீனாவின் 'ஹுவாயி' நிறுவனம் கவனம் செலுத்துகிறது

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் விதித்துள்ள பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்டுள்ள சீனாவின் புகழ்பெற்ற தொலைபேசி தயாரிப்பு நிறுவனமான ஹுவாய் (Huawei), நிதி நெருக்கடியை சமாளிக்கப் பன்றி வளர்த்தல் தொடர்பான தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

சீனாவின் ஹுவாய் நிறுவனம் தொலைபேசி தயாரிப்பு மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப சாதனங்கள் தயாரிப்பில் உலகின் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. ஹுவாய் நிறுவனம் தயாரித்த ஹுவாய் மற்றும் ஹானர் பிராண்ட் ஸ்மார்ட் போன்கள் புகழ்பெற்றவை. 5ஜி தொழில்நுட்பத்திலும் சிறந்து விளங்கியது. இந்த சூழலில் தான் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்ட பிரச்சினையில் சிக்கிக்கொண்டது ஹுவாய்.

சீன அதிபர் ஜீ ஜின்பிங்குக்காக ஹுவாய் நிறுவனம் கோடிக்கணக்கான அமெரிக்கர்களை வேவு பார்ப்பதாகவும், அதனால் அமெரிக்காவின் இறையாண்மை மற்றும் தேசியப் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி ஹுவாய் நிறுவனத்துக்குப் பொருளாதாரத் தடை விதித்தார், முன்னாள் அமெரிக்க அதிபரான டொனால்ட் ட்ரம்ப், இதையடுத்து, தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி பிரிட்டனும் ஹுவாய் நிறுவனத்தின் சேவைகளுக்குத் தடை விதித்தது. இதனால், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது ஹுவாய் நிறுவனம்.

இந்தத் தடைகளால், 5ஜி செல்போன் தயாரிப்புக்குத் தேவையான மைக்ரோசிப் கருவிகளை இறக்குமதி செய்ய முடியாததால், 4 ஜி வகை தொலைபேசிகளை மட்டுமே தற்போது ஹுவாய் நிறுவனத்தால் உற்பத்தி செய்ய முடிகிறது. இதன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் ஹுவாய் நிறுவனத்தின் விற்பனை 42 சதவிகிதம் அளவுக்குச் சரிந்தது.

மைக்ரோசிப் பற்றாக்குறை, விற்பனை பாதிப்பு ஆகிய காரணங்களால் ஹுவாய் நிறுவனம் தனது உற்பத்தியை 50 சதவிகிதத்துக்கும் அதிகமாகக் குறைத்துக்கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சூழலில் தான், கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஹுவாய், தகவல் தொழில்நுட்ப தொழிலுக்கு மாற்றாகப் பன்றி வளர்ப்புத் துறையில் கவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய பன்றி வளர்ப்புத் துறையைக் கொண்டுள்ள நாடாக இருக்கிறது சீனா. உலகளவில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் பன்றிகளில் அரைவாசிக்கும் மேல் சீனாவில் தான் உள்ளன. இதனால், பன்றி வளர்ப்பில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் புகுத்தி, பன்றிகளுக்கு ஏற்படும் நோய்த் தொற்றுக்களை அடையாளம் காணுதல், வளர்ப்பு மற்றும் நடமாட்டத்தைக் கண்காணித்தல், பன்றிகளின் எடை, உணவு ஆகியவற்றைக் கண்காணிக்கும் தொழில்நுட்பத்தை நவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது ஹுவாய். மேலும், மனிதர்க ளுக்கு இருப்பதைப் போலவே பன்றிகளுக்கும் முகமறிதல் (Facial recognition) தொழில்நுட் பத்தை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதனால், ஒவ்வொரு பன்றிகளையும் கண்காணிக்க முடியும் என்கிறது ஹுவாய்.

பன்றி வளர்ப்போடு நிறுத்தாமல், சுரங்கத் தொழில் துறையிலும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் முயற்சியில் ஹுவாய் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம், குறைவான தொழிலாளர்கள், அதிக பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றைச் சுரங்கத் தொழிலில் உறுதிப்படுத்த முடியும் என்று ஹுவாய் நிறுவனம் கூறியுள்ளது.

# நைஜீரியாவில் விமானப் படைக்குச் சொந்தமான பயணிகள் விமானம் விபத்து; 7 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவின் விமானப் படைக்குச் சொந்தமான பயணிகள் விமானம் விழுந்து நொறுங்கியதில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்து உள்ளனர்.


பீச்கிராப்ட் கிங் ஏர் பி 350 ஐ ரக விமானம் மின்னா நகரம் வழியாக அபுஜா விமான நிலையம் நோக்கி சென்று கொண்டு இருந்தது.

இந்த நிலையில் திடீரென என்ஜினில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்த விமானம் மின்னா நகரின் புதர் மண்ணில் விழுந்து விபத்துக்குள்ளானது.



# ஐ.நாவின் முதல் வரைவு கடும் ஏமாற்றமளிக்கிறது: அனுசரணை நாடுகள் வெட்கித் தலைகுனிய வேண்டும்!

## சி.வி.விக்னேஸ்வரன் காட்டம்



இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்டுள்ள முதல் வரைவு கடும் ஏமாற்றமளிக்கிறது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைவையிட்டு, பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மொன்டிநீக்குறோ, மசிடோனியா வடக்கு ஆகிய உள்ளகக் குழு அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இவ்வார கேள்வி பதிலில், ஜெனிவா தூதுக் குழுக்களிடையே இலங்கை சம்பந்தமாக கையளிக்கப்பட்ட 'சீரோ' வரைபு குறித்து ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவிக்கையில் -

குறித்த முதல் வரைவு குறைபாடு உள்ளதாகவும் ஏமாற்றம் தருவதாகவும் இருக்கின்றது. அதுவும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் காரியாலயத்தினதும் உயர்ஸ்தானிகர் பச்சலெட் அவர்களதும் சிபாரிசுகளுக்குக் குறைவாக இந்த வரைவு காணப்படுவது மிகவும் மன வேதனை அளிக்கின்றது.

வரைவு 30/1 தீர்மானத்தின் படிநிலைக்குக்கூட குறைவாக இருக்கின்றது. அந்தத் தீர்மானமும் அதனுடைய குறைபாடுகளால்தான் தோல்வியடைந்தது.

தமிழ் மக்களுக்குத் தேவையானதும் சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதுமான குறிக்கோள்கள் சம்பந்தமாகப் பார்க்கும் போது இவ்வாறான ஒரு வரைவு இலங்கை அரசாங்கத்திற்கு முரணான ஒரு கருத்தைக் கொண்டு செல்வதாக அமைகின்றது. தாமதம் அடையும் நீதி மறுக்கப்பட்ட நீதியாகும். ஏற்கனவே, ஆறு வருடங்கள் சென்றுவிட்டன. இலங்கை அரசாங்கம், தான் செய்வதாகக் கூறியவற்றில் எதனையும் மனமுவந்து செய்யவில்லை.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உள்ளகக் குழு வெகுஜன கொலையாளிகளையும் கற்பழிப்பாளர்களையும் பாதுகாக்கும் வண்ணம் இவ்வாறான ஒரு வரைவைத் தயாரித்தமை மன வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. இலங்கை அரசாங்கத் தலைவர்கள் இதுகண்டு விருந்துகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபடுவார்கள்.

இவ்வாறான வரைவு போர்க் குற்றங்களையும் மனிதத்துக்கு எதிரான குற்றங்களையும் இனப் படுகொலைகளையும் எந்தவிதப் பயமும் இன்றி இயற்றலாம் என்ற ஒரு கருத்தை உலகளாவிய அரசாங்கங்களுக்குக் கொடுப்பதாக அமையும். மனித உரிமைகள் சம்பந்தமாகவும் அடிப்படை நன்னடத்தை சம்பந்தமாகவும் கவனம் செலுத்தும் யாவருக்கும் இவ்வாறான ஒரு வரைவு மன வேதனையை அளிக்கும்.

பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மொன்டிநீக்குறோ, மசிடோனியா வடக்கு ஆகிய உள்ளகக் குழு அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இவ்வாறான வரைவுகள் ஐக்கிய நாடுகளின் வருங்காலத்துக்கு நன்மை பயக்காது என்பதை நாம் உணர வேண்டும்.

அதேநேரம், இலங்கையின் வடக்கு கிழக்கில் இருந்தும் உலக நாடுகளில் இருந்தும் நடைபெற்ற பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி, தமிழ் மக்களிடையே மதிப்பு மிக்க அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவர வேண்டும் என்பதில் புது வேகத்தையும் ஐக்கியத்தையும் வெளிப்படுத்தியுள்ளதைக் காண்கிறோம்.

புதியதொரு தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் அவர்களுடைய பாதுகாப்பையும் நலவுரித்துக்களையும் அவர்க ளின் வருங்கால எதிர்பார்ப்புக்களையும் காப்பாற்றுவதாக அமைய வேண்டும். தமிழ்த்தலைவர்கள் என்று கூறுவோர் சிலர் உறுப்பு நாடுகளிடம் சென்று எங்கள் பிரச்சினைகளைக் குறைத்துக் கூறினார்களோ தெரியவில்லை.

இலங்கை பற்றிய நடவடிக்கையானது இன்று ஐ.நா. பேரவையை ஒரு தராசில் தடுமாறிக் கொண்டிருக்க வைத்துள்ளது. - என்று குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.தீவுகளை சீனாவிடம் ஒப்படைக்க வேண்டாம்!

## சிங்களே தேசிய ஒன்றிணைந்த அமைப்பு வலியுறுத்தல்



கொழும்பு, பெப்.22

வடக்கில் அமைந்துள்ள நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளை சீனாவுக்கு ஒப்படைக்க வேண்டாம் என்றும் , அது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோரை தெளிவான தீர்மானமொன்றை எடுக்குமாறும் சிங்களே தேசிய ஒன்றிணைந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிங்களே தேசிய ஒன்றிணைந்த அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தின் போது அதன் தேசிய அமைப்பாளர் சானக்க பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு கீழேயே இயங்கிவருகின்றது. வடக்கில் அமைந்துள்ள நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளை, சீனா தங்களுக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இலங்கை சீனாவின் காலணித்துவ நாடாக மாறிவருவதை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்திய - சீனா போராட்டத்துக்கு மத்தியில் எமது நாட்டின் வளங்கள் வெளிநாட்டவருக்கு வசமாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துச் செல்கின்றமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. வடக்கிலுள்ள மூன்று தீவுகளையும் , மின்சார உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக தங்களுக்கு வழங்குமாறு சீனா கேட்கின்றது. இந்த தீவுகளின் மதிப்பு தொடர்பில் நாட்டு மக்களுக்கும் , நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் புரியவில்லையா?

இந்த தீவுகள் இந்தியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ வழங்கப்படுமாயின், அந்த நாடுகளுக்கிடையில் காணப்படும் அதிகாரப் போராட்டத்துக்கு மத்தியில், ஏதாவது மோதல்கள் ஏற்படும் போது இலங்கையே பாதிப்புகளை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவே பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரின் வெளிநாட்டு கொள்கைத்திட்டங்கள் தொடர்பில் நாம் அறிவோம். அதேபோன்று தற்போதைய அரசாங்கத்திடமும் தெளிவான தேசிய மற்றும் வெளிநாட்டு கொள்கைகள் காணப்படுமாயின் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாது.

சீனா தெற்காசியா நாடுகளுக்கு மத்தியில் அனைத்து அதிகாரங்களையும் தம்வசப்படுத்திக் கொள்ள முயற்சித்து வரும் நாடாகும். நாட்டின் வர்த்தக பொருளாதார துறையில் பெரும் பகுதியை சீன கைப்பற்றிக் கொண்டுள்ளது. ஏற்கனவே அம்பாந்தோட்டை துறைமுகம் 99 வருடங்கள் வரை சீனாவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு துறைமுத்தின் ஒரு முனையம் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது வடக்கிலுள்ள மூன்று தீவுகளை ஒப்படைப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு கடனுதவிகளை பெற்றுக் கொடுத்து , நாட்டின் வளங்களை கொள்ளையிட சீனா முயற்சித்தால் அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்க மாட்டோம். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்துவந்த தேசிய அமைப்புகள் தற்போது அமைதிகாத்து வருவதற்கான காரணம் என்ன? இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டு அமைச்சர் இது தொடர்பில் தெளிவான தீர்மானத்தை எடுக்கவேண்டும். - என்று தெரிவித்தார்.

# 'இழப்பே இனி எம் பலமாய்' எனும் தொனியில் யாழ்ப்பாணத்தில் உலக தாய்மொழி தின நிகழ்வு



'இழப்பே இனி எம் பலமாய்' எனும் தொனிப்பொருளில் உலக தாய்மொழி தின நிகழ்வுகள் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கலை பண்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் தாய்மொழி தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் அருணாச்சலம் சண்முகதாஸ் மற்றும் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொண்டிருந்த அதேவேளை, சிறப்பு விருந்தினராக முன்னாள் தமிழ்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் கலந்துகொண்டிருந்தார்.

அத்தோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், சட்ட ஆலோசகர்களான சட்டத்தரணி க.சுகாஸ், ந.காண்டீபன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா திரவம் அடைக்கப்பட்ட போத்தல்கள் பெலவத்தவில் அதிரடிப்படையால் பறிமுதல்!



பெலவத்த பகுதியில் கஞ்சா திரவம் அடைக்கப்பட்ட ஆறு திரவ போத்தல்களுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடைப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட கஞ்சா திரவத்தின் பெறுமதி 25 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

# பழ.நெடுமாறன் கொரோனா தொற்றிலிருந்து குணமடைய நல்லூரில் சிறப்பு வழிபாடு!



கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் நலம் பெறவேண்டி நல்லூரில் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

கொரோனாத் தொற்றால் சில தினங்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்டு, சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 83 வயதான பழ. நெடுமாறன் இலங்கைத் தமிழ் மக்களின் மீது தீவிர பற்றுக் கொண்டவர்.

இந்நிலையில், அவர் விரைவில் நலம் பெற்று வீடு திரும்பவேண்டுமென, சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை நல்லூரில் கந்தசுவாமி கோயிலில் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

இதில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகமுமான அனந்தி சசிதரனும் கலந்து கொண்டார்.

ஈழத்தமிழர் போராட்டத்தில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாகத் தன்னை அர்ப்பணித்து பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தவர் பழ. நெடுமாறன் என்பது குறிப்பிடத்தக்கது.

# சொல்லும் செயலும் ஒன்றே அங்கஜன் எம்.பி சூளுரை!

## சரவணபவன், கஜேந்திரனுக்கு சாட்டை



அரசியலுக்காக மக்களை ஏமாற்ற நான் தயாரில்லை என நாடாளுமன்ற குழுக்களின் பிரதிதவிசாளரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு அங்கஜன் எம்.பி. துணை போகின்றார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கடந்த வாரம் ஊடகங்களுக்கு வழங்கிய கருத்து தொடர்பில் பதிளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நானும் மீள்குடியேற்ற பிரதேசத்தைச் சேர்ந்தவன். அந்தவகையில் மக்களின் வலியை என்னால் நன்கு உணர முடியும்.

நான் அரசாங்கத்தின் முகவர் அல்லன். என்றும் எம் மக்களின் முகவராக மக்களின் பிரச்சினைகளை அரசில் பிரதிபலிப்பவனாகவே அரசாங்கத்துடன் உள்ளேன்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் தனியார் காணி சுவீகரிப்பு தொடர்பில் நான் அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படுகின்றேன் என மக்களால் தோற்கடிக்கப்பட்ட சில அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் தவறான ஒரு கருத்தைக் கொண்டு சேர்ப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் காணியை அவர்களின் சம்மதம் இன்றி சுவீகரிப்பதை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாததோடு, குறித்த நிலைப்பாடு தொடர்பில் கடந்த மாதம் வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தெளிவாகத் தீர்மானம் எடுத்திருந்தேன் என்பது யாவரும் அறிந்ததே.

இந்த அபிவிருத்தி குழுக் கூட்டம் என்பது அரசாங்கத்தால் மக்களுக்காக வழங்கப்பட்ட திட்டங்களைத் தடைகளின்றி நடைமுறைப்படுத்த வழியமைத்தல் மற்றும் மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லும் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

காணி சுவீகரிப்பு தொடர்பில் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களால் எதுவும் பெரிதாக நடந்துவிடப்போவது இல்லை என்பது தீர்மானங்களை எடுங்கள் என குழப்பம் விளைவிப்பவர்களுக்கு நன்றாக தெரியும். ஆனால் அபிவிருத்தி குழுக்கூட்டங்களை வலுவிழக்க செய்வதே அவர்களின் உள்நோக்காகும்.

நாடாளுமன்றத்தில் எதை எதையோ பேசி காலத்தையும் நேரத்தையும் வீணடிக்கும் தமிழ் தேசியவாதிகள் என தம்மை அடையாளப்படுத்தி கொள்வோரால் ஏன்? நாடாளுமன்றத்தில் யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு தொடர்பில் தனியான ஒரு விவாதத்தை இதுவரை நடத்தக் கோரவில்லை?

அதைவிட பல சட்ட மாமேதைகள் வெறுமனே வீதியிலிறங்கி போராடுகின்றமையை விடுத்து நீதிமன்றங்களூடாக மக்களுக்கு சட்ட ரீதியான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கலாமே.

நான் கடந்த நாடாளுமன்ற தேர்தலிற்கு முன்னர் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவே தமிழ் மக்களுக்கு சேவையாற்றினேன்.

அதன் பெறுபேறாகவே மக்கள் என்னைத் தமது நேரடி பிரதிநிதியாக அதிகூடிய விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்றம் அனுப்பிவைத்தார்கள்.

என்னை விமர்சிக்கும் இருவரும் மக்களால் தோற்கடிக்கப்பட்ட நிலையில் ஒருவர் 2004 காலப் பகுதியில் ஒரு லட்சத்துக்கு மேலாக விருப்பு வாக்குக்கள் பெற்று நாடாளுமன்றம் சென்று தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று நாடாளுமன்ற தேர்தலில்களில் மக்களால் ஓரங்கட்டப்பட்டவர்.

கடந்த 2020 இல் நடைபெற்ற பொது தேர்தலில் 2004 இல் பெற்ற விருப்பு வாக்குகளின் வெறும் கால்வாசி வாக்குகளே கிடைத்த நிலையில் கட்சிக்கு வழங்கப்பட்ட தேசிய பட்டியல் ஆசனம் ஊடக நாடாளுமன்றம் சென்று தனது இருப்பை தக்க வைத்து கொள்ளவதற்கு தமிழ் மக்களைத் தவறாக வழி நடாத்த முற்படுகின்றனர்.

ஆகவே, எனக்கு எம் மக்களுடைய வேதனைகள் அவர்களின் எதிர்பார்ப்புகள் நன்கு புரிகின்ற நிலையில் போலித் தேசியம் பேசி நடைமுறைக்கு சாத்தியமற்ற தீர்மானங்களை வெறுமனே தீர்மானங்களை மட்டும் அடுக்கி விட நான் தயாரில்லை என்பதோடு, மக்களுக்கு என்னால் செய்ய கூடியவற்றை சொல்லிலும் செயலிலும் வெளிப்படையாக செய்வேன். – என்றார்.

# மாகாண சபைகள் வலுப்பெறவேண்டும்!

## அரசமைப்பு நிபுணர் குழுவுக்கு ஈ.பி.டி.பி. பரிந்துரை

மாகாண சபையை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை வலுவாக நடைமுறைப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழுவிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியால் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்ட பரிந்துரைகளிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பரிந்துரைகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர், புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழுவின் தலைவர் றொமேஸ் டிசில்வா தலைமையிலான நிபுணர் குழுவிடம் கையளித்தனர்.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும், மாகாண சபையை மேலும் வலுப்படுத்தும் ஏற்பாடுகளும் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் நிபுணர் குழுவிற்கு ஈ.பி.டி.பி. பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான அதிரகாரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டவர்கள் சந்தர்ப்பத்தைப் பாழாக்கிவிட்டனர் என்று குற்றஞ்சாட்டி வருகின்ற ஈ.பி.டி.பி., மாகாண சபை முறைமையை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து, முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை அடைந்து கொள்ள முடியும் என சுட்டிக்காட்டியுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.02.2021இல் வெளியிடப்பெற்றது.